தொகுதி -XIV ஜூலை -2004 இதழ்-2

# சிந்தனை

ஆசிரியர்

பேராசிரியர் கார்த்திகேசு குகபாலன்

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் புகையிலை வர்த்தகத்தில் மலையாளம்

திரு. க.அருந்தவராஜா

## ஆய்வுச் சுருக்கம்

*மலையாளப் புகையிலை வியாபாரமானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் பொருளாதாரத்திலே பாரிய தாக்கத்தினை உண்டாக்கிய ஒரு வியாபார நடவடிக்கையாகக் காணப்படுகின்றது. இவ்வியாபார நடவடிக்கையின் தோற்றம், அதன் போக்கு, அதன் வீழ்ச்சி போன்ற விடயங்களைப் பெருமளவுக்கு அக்காலப்பகுதியில் வெளிவந்த ஆதாரங்களுடன் இங்கு ஆராயப்படுகின்றது.*

### அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கால பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை இலங்கையின் வட பகுதிக்கும் இந்தியாவின் திருவாங்கூர் என்ற இடத்துக்கும் இடையிலே பிரபலமாக நடைபெற்ற ஒரு வியாபார நடவடிக்கையே மலையாளப் புகையிலை வியாபார நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையின் மூலம் அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடு பெருமளவு வருமானத்தினைப் பெற்றுக் கொண்டது. இவ்வியாபாரம் தொடர்பாக வெளியீடுகளோ ஏனைய ஆக்கங்களோ பெருமளவுக்கு வரவில்லையென்றே கூற வேண்டும். அந்தவகையில் இக்கட்டுரையில் இவ்வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி, இந்துசாதனம் போன்ற பத்திரிகைகள் பிரதான ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மலையாளப் புகையிலை வியாபாரம் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்வதற்கு இவை மிகவும் சிறந்த ஆதாரங்களாக இன்றும் காணப்படுகின்றன.

### குடாநாட்டின் பொருளாதாரம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருக்கின்ற இலங்கைத்தீவின் வட பகுதியில் காணப்படுகின்ற குடாநாடே யாழ்ப்பாணக் குடாநாடாகும். இது தனக்கென்ற சில குணஇயல்புகளையும், சமூகக் கட்டுப்பாடுகளையும், வழக்காறுகளையும், பொருளாதார ஒழுங்கு முறைகளையும் நீண்ட காலமாகவே பேணி வந்துள்ளது. இத்தகைய யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில், அதன் வளர்ச்சியில் பொருளாதார நடவடிக்கைகள் கணிசமான பங்கினை நீண்ட காலமாகவே வகித்து வந்திருக்கின்றன. எனினும் காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையில் இவற்றின் தன்மைகள் காலத்திற்குக் காலம் மாறுபடுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக விவசாயமே இதன் அடிப்படையாக இருந்தாலும் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பயிர்கள் இவ்விடத்தினை நிரப்பிக் கொண்டன.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஏறத்தாழநான்கு நூற்றாண்டுகள் வரை ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி இங்கே காணப்பட்டது. இவர்கள் தமது ஆட்சிக்காலப்

பகுதியில் விவசாயத்தின் வளர்ச்சிக்கு தம்மாலான பங்கினை வழங்கியிருந்தனர். நெல், குரக்கன், வரகு போன்ற தானியங்களும் எள்ளு, பயறு, வாழை, கமுகு, கரும்பு பருத்தி போன்றவையும் இக்காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டன[1]. நெசவுக் கைத்தொழில், சாயக் கைத்தொழில் போன்றவையும் வளர்ச்சி கண்டிருந்தன. இவற்றினை விட வெளிநாடு களுடனான வாணிபமும் குறிப்பிடத்தக்களவு நடைபெற்றதென்றெ கூறவேண்டும்.

யாழ்ப்பாண அரசு நிலைத்திருந்த காலத்திலும் சரி போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் வட இலங்கையினை ஆட்சி செய்த காலப்பகுதியலும் சரி யாழ்ப்பாணமும் தென்னிந் தியாவும் வர்த்தக அடிப்படையில் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தன.[2] குறிப்பாக மலையாளம், சோழ மண்டலக்கரை ஆகிய வற்றுடன் நடைபெற்ற வர்த்தகமானது யாழ்ப்பாணத்தின் உயிர் நாடியாக இருந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்கள் உட்பட பல பொருட்கள் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. யாழ்ப்பாணமக்களுக்கு நாளாந்தம் தேவைப் படுகின்ற பல்வேறு பொருட்கள் மலையாளத்தி லிருந்தும் தமிழ் நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டன. இத்தகைய வியாபார நடவடிக்கையானது தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் காலத்திலும் நீடித்தது.

## மலையாளப் புகையிலை வியாபாரம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் நடுப் பகுதியில் வடபகுதியில் முக்கியமான வாணிப நடவடிக்கையாக மலையாளப் புகையிலை வியாபாரம் இருந்து வந்தது. இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து பெருமளவு புகையிலை மலையாளத்துக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது.

அதே நேரத்தில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற ஐரோப்பியர்களின் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குப் பிறநாடுகளிலிருந்து புகையிலை இறக்குமதி செய்யப்பட்டமைக்கான ஆதாரங்களும் உண்டு. யாழ்ப்பாணச்சரித்திரம் என்ற நூலில் போர்த்துக்கேயர் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட புகையிலை தொடர்பாக எடுத்துக் காட்டப்பட்ட பின்வரும் கூற்று இதனைத் தெளிவாக்குகின்றது.

"புகையிலை வரியும் குத்தகையாய் விற்கப்பட்டது. குத்தகைக்காரனைத் தவிர ஒருவரும் புகையிலை விற்கக் கூடாது எனவும் பிற தேசங்களிலிருந்து புகையிலை விற்பதற்கு வருவிக்கப்பட்டால் அதனைக் குத்தகைக் காரனுக்கு விற்றுப் போட வேண்டுமெனவும், அவனுடைய உத்தரவுச் சீட்டு இல்லாமல் எவரும் புகையிலை வைத்திருக்கப்படாதெனவும், வேளாளரும், பரதேசிகளும் தங்கள் உபயோகத்திற்கு மாத்திரம் வேண்டிய புகையிலை வைத்திருப்பதேயொழிய சந்தையில் விற்கப்படாதெனவும், களவாக கொண்டு வரப்பட்டால் குத்தகைக்காரன் அதைப்பற்றி பாக்றருக்கு அறிவிக்க வேண்டுமெனவும் கட்டளையிருந்தது."[3]

போர்த்துக்கேயர் காலத்தில் மட்டுமன்றி ஒல்லாந்தர் காலத்திலும் பிறதேசங்களிலிருந்து வருகின்ற புகையிலைக்கு 100க்கு 30 வீதம் வரி அறவிட்டிருந்ததனையும் அறிய முடிகிறது.[4] பொதுவாக இம்மலையாளப் புகையிலை வியாபாரத்தில் அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானம் பற்றியும் போர்த்துக்கேயர்களின் ஆட்சிக் காலத்திலிருந்து சான்றுகள்

கிடைத்துள்ளன. குத்தகைக்காரர்களுக்கு மட்டுமே புகையிலை விற்பனை செய்யவேண்டு மென்று அரசு சட்டமொன்றை ஏற்படுத்தியதுடன் 1645 இல் அரசாங்கத்திற்கு இப்புகையிலை வியாபாரத்தின் மூலம் 5000 பர்தாக்கள் வரியாகவும் கிடைத்தது.[5]

**ஆங்கிலேயர் காலத்தில் மலையாளப் புகையிலை வியாபாரம்**

ஆங்கிலேயர் காலத்தில் நடைபெற்ற மலையாளப் புகையிலை வியாபாரமானது சுமாத்திராவில் உள்ள அல்ஜினுக்கும் இந்தியா விலுள்ள திருவாங்கூருக்கும் இடையிலே நடைபெற்றது.[6] இவ்வாறு பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலையைக் கொண்டே அரிசியும் ஏனைய உணவுப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டன. தொடர்ந்தும் பலகாலமாக நடைபெற்ற இவ்வியாபாரமானது, யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக இருந்து வந்தது.

சாப்பிடுவதற்காக உபயோகிக்கப்பட்ட புகையிலையே தொடக்க காலங்களில் திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு முதன் முதலாகக் கொண்டு செல்லப்பட்டது. நாசி நோய், சலரோகம் முதலிய நோய்களுக்கு புகையிலை உண்பது மிகவும் அமைதியினைக் கொடுப்பதாக அக்காலத்தில் நம்பப்பட்டது. மேலும் சுவாசக்குழாயில் தோன்றுகின்ற நோய்களுக்கு இது மிகவும் ஏற்றது என எண்ணியதன் காரணத்தினாலும் திருவாங்கூர் அரசாங்கம் இதனை ஆதரித்தது.

இப்பின்னணியில் திருவாங்கூர் அரசாங்கம் அக்காலத்தில் இப் புகையிலையைக் கொள்வனவு செய்து அனுப்புவதற்காக இங்குள்ளவர்களுடன் உடன்பாடும் செய்து கொண்டது. மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்லப்படுகின்ற புகையிலையைச் சேமித்து வைக்கின்ற நோக்குடன் இந்தியாவில் கொல்லம், ஆலப்பள்ளி போன்ற இடங்களில் அரசாங்கம் பண்டகசாலைகளையும் அமைத் திருந்தது. ஆரம்பகாலத்தில் இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலை அரசாங்கத்திற்கு சொந்தமாகி விடுவதுடன் தீர்வைகளும் அதற்கு விதிக்கப்படவில்லை. இறக்குமதி செய்யப்பட்ட புகையிலையை அரசாங்கம் அங்கிருந்து பிரபல வியாபாரிகளுக்கு நிலையான விலைக்கு விற்பனை செய்து வந்தது. எனவே இவற்றிலி ருந்து, ஆரம்பகாலங்களில் மலையாளப் புகையிலை வியாபாரம் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்ததினை அறிய முடிகின்றது.

**தரகர் முறையின் தோற்றம்**

பிற்பட்ட காலங்களில் திருட்டுத்தன மாகச் சிலரினால் திருவாங்கூர் சமஸ்தானத்திற்குள் புகையிலை அனுப்பப் பட்டதன் காரணத்தினால் 1864 இல் அரசாங்கம் ஒரு சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன்படி இப்புகையிலை வியாபாரத்தினை எவரும் நடத்தலாமெனவும் அதேநேரம் முதலில் இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலை அரசாங்கப் பண்டகசாலைக்கு முதலில் கொண்டு வரப்பட்டுத் தீர்வை கொடுக்கப் பட்டதன் பின்பே விற்பனை செய்யப்பட வேண்டுமென அதில் கூறப்பட்டது[7].

இக்கட்டத்திலிருந்துதான் தரகர் முறை இவ்வியாபாரத்தில் ஆரம்பித்தது. இவர்கள் திருவாங்கூர் அரசாங்கத்திற்கு ஒரு தொகைப் பணத்தினைக் கொடுத்து அவர்களிடம் அனுமதியினைப் பெற்றதன் பின்னர் (Licence) தமது கடமைகளை மேற்கொண்டனர்.

பண்டகசாலையிலிருந்து புகையிலையை அகற்றுகின்றபோதே பண்டகசாலை வரியாக சிறிதளவு பணம் கொடுக்கப்படுதல் வேண்டும். பண்டகசாலையில் புகையிலை இருக்கும்வரை அரசாங்கமே அதற்கு முழுப்பொறுப்பும் கொண்டிருக்கும். அக்காலத்தில் மாதமொன்றுக்கு ஒரு சிற்பம் புகையிலைக்கு மூன்றுசதம் வாடகைப் பணமாகக் காணப்பட்டது. இவ்வாறு வாடகைப்பணம் குறைவாகக் காணப்பட்டதால் வியாபாரிகள் பெருமளவுக்கு நன்மையடைந்தனர் என்றே கூற வேண்டும்.

இப்பண்டகசாலை முறையினால் சில அனுகூலங்களும் கிடைக்குமென அக்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது.

* வீடுகளின் வாடகைப் பணத்திலும் பார்க்க அரசாங்கத்தின் பண்டகசாலைக்கு மாதாந்தம் கொடுக்கின்ற வாடகைப் பணம் குறைவாக இருந்தமை.
* வியாபாரிகள் காவலாளிக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை.
* புகையிலை இறக்குமதி செய்யப்பட்டு ஆறு மாதங்கள் கடந்ததன் பின்னரே அவை விற்பனை செய்யப்படும். அதுவரை வாடகையும் தீர்வையும் கொடுக்க வேண்டியதில்லை. உடனே பண்டகசாலையிலிருந்து எடுத்துச் சென்றால் தீர்வையும் வாடகைப் பணமும் கொடுக்க வேண்டி ஏற்படும். இதனால் புகையிலை விற்பனை செய்யத் தொடங்கும் வரையான ஐந்து மாதங்களுக்கு ஏற்படுகின்ற வட்டிப் பணமும் வீணாகும்.

1864 தொடக்கம் தொடர்ந்து 20 வருடங்கள் மலையாளப் புகையிலை வியாபாரம் விருத்தி கண்டமையினால் திருவாங்கூர் அரசாங்கத்திற்கு தீர்வை வருமானம் அதிகரித்துச் சென்றது. இக்காலப் பகுதியில் விதிக்கப்பட்ட தீர்வைகளும் அதிகரித்தன.

### தீர்வை அதிகரிப்பு

திருவாங்கூர் அரசாங்கம் தனது வருமானத்தினை அதிகரிக்கின்ற நோக்குடன் காலத்துக்குக் காலம் தீர்வையின் அதிகரிப்பினை மேற்கொண்டது. இதனால் எதிர்ப்புகள் பலவற்றையும் அவ் அரசாங்கம் சந்திக்க வேண்டியேற்பட்டது. 1885இல் யாழ்ப்பாணப் புகையிலைக்கும் கோயம்புத்தூரிலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலைக்கும் தீர்வையினை கண்டிக்கு 90 ரூபாவாக அரசாங்கம் அதிகரித்தது. தொடர்ந்து 1910 இல் சென்னை அரசாங்கம் இந்தியாவுக்குள் பிறநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற புகையிலையின் தீர்வையினை 90ரூபாவிலிருந்து 900ரூபாவாக அதிகரித்தது. இந்த ஏற்பாடு திருவாங்கூருக்குள் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்படுகின்ற புகையிலைக்கு மட்டுமன்றி ஆலப் பள்ளி, கொல்லம் கொச்சி முதலிய துறைமுகங்கள் ஊடாக அனுப்பப்படுகின்ற புகையிலைக்கும் ஏற்புடையதாக இருந்தது.

இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரபலம் வாய்ந்த அரசியல் தலைவர்களிலொருவராக விளங்கிய அ.சபாபதி என்பவர் இந்தியா சென்று யாழ்ப்பாணப் புகையிலைக்கு 900 ரூபா வரியாக விதிக்கப்படுவது நியாயமற்றதெனவும், அதனை முன்பிருந்தபடி 90 ரூபா தீர்வையுடன் மலையாளத்திற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கும்படியும் கோரியிருந்தார். இதற்கிணங்க திருவாங்கூர் அரசாங்கம் முன்பிருந்தபடி 90 ரூபாவை தீர்வையாக விதிப்பதற்கு உடன்பட்டது.

தொடர்ந்து 1912ஆம் ஆண்டளவில் திருவாங்கூருக்குள் இறக்குமதி செய்யப்படுகின்ற யாழ்ப்பாணப் புகையிலையின் தீர்வை 90 ரூபாவிலிருந்து 110 ரூபாவாக உயர்த்தப்பட்டது. அதே நேரம் கோயம் புத்தூரிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலையின் தீர்வை 60ரூபாவிலிருந்து 100ரூபாவாகவும் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு திருவாங்கூர் அரசினர், காலத்திற்குக் காலம் புகையிலையின் வரியினை உயர்த்தி வந்தனர். 1939இலும் இவ்வாறான தொரு தீர்வை அதிகரிப்பு ஏற்பட்டது. அப்போது ஒரு கண்டிக்கு 200 ரூபாவாக தீர்வை உயர்த்தப்பட்டது. இதனை அக்காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்துகொண்டிருந்த இந்து சாதனம் பத்திரிகை பின்வருமாறு குறை கூறுகின்றது.

"இந்திய அதிகாரிகள் யாழ்ப்பாணப் புகையிலையின் தீர்வைகளை இப்படிக் காலந்தோறும் உயர்த்திக்கொண்டு வந்தார்களேயொழிய கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய ஊர்களிலிருந்து திருவாங்கூர் செல்லும் புகையிலைக்கு எக்காலத்திலும் தீர்வை விலை உயர்த்தப்படவில்லை."[8]

குறிப்பாக இந்தியாவின் பகுதிகளிலிருந்து அனுப்பப்படுகின்ற புகையிலைக்கு தீர்வை குறைவாக விதிக்கப்பட, யாழ்ப்பாணத்திலிருந்து திருவாங்கூருக்கு அனுப்பப்படுகின்ற புகையிலைக்கு அதிகளவு தீர்வை விதிக்கப்பட்டதனால் அதனைக் கண்டித்து யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் கிளர்ச்சிகள் ஏற்படத் தொடங்கின. இது தொடர்பாக வியாபாரிகள், விவசாயிகள் ஆகியோர் அடங்கிய கூட்டமொன்று 1959 யூலை 16இல் புன்னாலைக் கட்டுவன் ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வாறு காலத்துக்குக் காலம் வரிகள் உயர்த்தப்பட்டு வந்தமைக்கு அக்காலப் பகுதியில் பல காரணங்கள் கூறப்பட்டு வந்தன. அவற்றில் ஒன்று அக்காலப் பகுதியில் தென்னிந்தியத் தொழிலாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் பல நெருக்கடிகளை ஏற்படுத்தி வந்ததென்பது முக்கிய காரணமாகும். மற்றைய காரணம் புகையிலை வரிகளை உயர்த்தி வருவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை பாதுகாத்து அவற்றினை அதிகரிப்பதென்பதாகும். தொடக்க காலங்களில் 15,00,000ரூபா பெறுமதியான புகையிலை மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்டு வந்த கிளர்ச்சிகளின் பலனாகத் தீர்வை 65 ரூபாவாகக் குறைக்கப்பட்டு 135 ரூபாவாக திருவாங்கூர் அரசாங்கம் தீர்வையை மாற்றிக்கொண்டது. இதற்காக இலங்கை அரசாங்கம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையாக 1,00,000, ரூபாவை வழங்கியது.

இவ்விதமான பிரச்சினைகள் காரணமாக புகையிலைச் செய்கையில் பொருளாதாரம் தங்கி நிற்பது உகந்ததல்ல எனவும், மலையாளத்தை நம்புவதில் பயன் ஏற்படாது போன்ற கருத்துக்கள் அக்காலப் பத்திரிகைகள் பலவற்றில் வெளிவந்தன. இத்தகையதொரு கருத்தினை சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரிப் பத்திரிகை பின்வருமாறு முன்வைக்கின்றது.

"மலையாள மக்கட்கு ஏற்ற புகையிலை பயிரிடும் சாமர்த்தியம் வாய்ந்த யாழ்ப்பாணக் கமக்காரர் பீடி,சிகரட் என்பன தயாரிப்பதற்கு

ஏற்ற புகையிலைச் செய்கை பண்ணவியலாது எப்போதும் மலையாளத்தை நம்பி வாழ்ந்து வருவதா? பல முறை இந்த ஆபத்திற்கு யாழ்ப்பாண மக்கள் ஆளாக வேண்டியிருக் கின்றது.''[9]

பொதுவாக 1930 ஆம் ஆண்டின் பின்பாக திருவாங்கூரில் வாழ்ந்த விவசாயிகள் பெருமளவு நிதிநெருக்கடியினை எதிர்நோக்கியி ருந்தனர். இதற்குக் காரணம் அவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்முடியாமல் போனமையாகும்.[10] இதன் காரணமாக அங்கே யாழ்ப்பாணப் புகையிலையை சில காலத்திற்கு உயர்வான விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் போயிற்று. அதே நேரத்தில் தொடர்ந்து திருவாங்கூருக்கு கோயம்புத்தூர், திருநெல்வேலி போன்ற இடங்களிலிருந்து புகையிலைஅனுப்பப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனை உறுதிப்படுத்துகின்ற வகையிலே இந்து சாதனம் என்ற பத்திரிகையில் எஸ். அருளம்பலம் என்பவர் வரைந்த கட்டுரையில் பின்வரும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

''திருவாங்கூரில் தேங்காய் நல்ல நிலையில் விற்கப்பட்ட காலத்தில் எம் புகையிலை அங்கு மானமாக விற்கப்பட்டது. ஆனால் இங்கே வியாபாரம் வீழ்ச்சியடைய மக்கள் பணப் பிரச்சினையால் சிறந்த நல்ல புகையிலையை வாங்கி உபயோகிக்க முடியாது போயிற்று. இது மாத்திரமன்றி எமது சொந்தப் புகையிலை வியாபாரிமார் சிலவருடம் மலையாளப் புகை யிலைச் செய்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் அனுபவிக்கும் முறையினைக் காட்டிக் கொடுத்து விட்டனர்.''[11]

புகையிலை வியாபாரத்தின் இத்தகைய நெருக்கடிக்குத் தீர்வு காணுகின்ற நோக்கில் மலையாளப் புகையிலை வியாபாரிகள் முன்னூறுபேர் வரையானவர்கள் வர்த்தகக் கைத்தொழில் அமைச்சருக்கு அப்போதைய புகையிலை வியாபாரத்தின் நிலைமை பற்றியும் அதற்கு வேண்டிய முறைகளைக் கையாண்டு வியாபாரத்தினை விருத்தி செய்ய உதவி செய்யுமாறு கோரியும் விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதன்போது பின்வரும் உதவிகள் அமைச்சரிடம் கோரப்பட்டிருந்தன.

* கோயம்புத்தூர் புகையிலைக்கும் யாழ்ப்பாணப் புகையிலைக்கும் ஒரேயள வான தீர்வையினை அறவிட வேண்டும்.
* புகையிலை துறைமுகத்தினை வந்தடைந்த உடனேயே தீர்வையினைக் கணிக்காமல் முன்பிருந்த முறைப்படி விற்பனை செய்கின்ற நேரத்தில் கணக்கிட வேண்டும்.
* யாழ்ப்பாணப் புகையிலையை இறக்குமதி செய்வதற்கு கொச்சித் துறைமுகத்தினை திறக்க வேண்டும்.
* திருநெல்வேலி முதலிய இடங்களுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற புகையிலை யின் தீர்வையினைக் குறைக்க வேண்டும்.[12]

பொதுவாக மலையாளப் புகையிலை வியாபாரத்தின்போது யாழ்ப்பாண மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக் கியிருந்தனர். குறிப்பாகப் பண்டகசாலையில் புகையிலையைக் கொண்டு ஒப்படைக்கின்ற போது அது காணப்பட்ட நிறைக்கும் விற்பனை செய்யப்படுகின்ற அல்லது அங்கிருந்து அகற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிறைக்கும் இடையிலே பாரிய வேறுபாடுகள் இருந்தன. இத்தகையதொரு நிலைமைக்கு அக்காலத்தில் பல காரணங்கள் கூறப்பட்டன.

அதாவது புகையிலையைக் கடல் மார்க்கமாகக் கொண்டு செல்கின்ற போது அது ஈரமடைகின்றதெனவும், பின்னர் அது உலர்வதனால் இத்தகையதொரு நிலைமை ஏற்படுவதாகவும் கூறப்பட்டது. மேலும் புகையிலையினை உப்புத் தண்ணீர் தெளித்து உலர்த்துகின்றபோதும், சிப்பமாக்கப்படுகின்ற வேளையிலும் மேற்கூறப்பட்ட நிலைமை உண்டாவதாகக் கருதப்பட்டது.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளைத் தவிர காலத்துக்குக் காலம் தீர்வைகள் உயர்த்தப் படுதல், தரகர்களின் கெடுபிடிகள் தொல்லைகள் போன்ற பிரச்சினைகளையும் அக்காலப் பகுதியில் மலையாளப் புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் எதிர்நோக்கினர்.

**ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் தோற்றம்.**

1934 இல் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம் தாபிக்கப்பட்ட நிகழ்வானது இவ்வியாபாரத்தில் ஒரு முற்போக்கான நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. இச்சங்கம் வியாபாரிகளின் கைகளிலிருந்து வந்த வியாபாரத்தினை பொறுப்பேற்று நடத்தி அதில் வெற்றியும் கண்டது. இதன் காரணமாக வியாபாரிகள், தரகர்களின் தொல்லைகள் இவ்வியாபாரத்தில் ஓரளவுக்கு குறைக்கப் பட்டன. இச்சங்கமானது புகையிலை வியாபாரிகளிடமிருந்து புகையிலையினை நேரடியாகவே பெற்றுக்கொண்டது.

ஐக்கிய வியாபரச் சங்கம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி அக்காலத்தில் வெளி வந்த தமிழ்ப்பத்திரிகைகள் பல எடுத்துக் காட்டுகின்றன. இவ்விடயம் தொடர்பாக ஈழகேசரிப் பத்திரிகையில் வலியுறுத்தப்பட்ட ஒரு செய்தி பின்வருமாறு

"ஒரு ஐக்கிய சங்கத்தை அமைத்து அச்சங்கத்தாலே புகையிலையைத் தங்கள் செலவில் மலையாளத்திற்கு அனுப்பச் செய்யவேண்டும்...... இப்படி ஐக்கிய முறைப்படி வியாபாரத்தை நடத்த அரசினரே முன்வரவேண்டும்."[13]

இச்சங்கத்தின் தோற்றம் பற்றித் தனது மற்றொரு வெளியீட்டில் ஈழகேசரிப் பத்திரிகை பின்வருமாறு மகிழ்ச்சி தெரிவிக்கின்றது.

"கமக்காரருக்கு நிறைந்த நன்மைகளை செய்ய முற்பட்ட சங்கத்தை இப்போதே ஆதரித்து நிற்பது யாவரதும் கடனாகும்"[14]

இச்சங்கத்தின் வருகையினால் பாதிப் படைந்த பலரும் இதன் நடவடிகைகள் பற்றிக் குறை கூற முற்பட்டனர். குறிப்பாக தனிப்பட்ட ரீதியில் வியாபாரத்தினை மேற் கொண்டவர்கள் இச்சங்கம் அனுபவமற்றவர்களால் ஆரம்பிக்கப் பட்டதெனவும் இவர்கள் மூலம் அனுப்பப்படு கின்ற புகைலையைக் கொள்வனவு செய்யக் கூடாதெனவும் தென்னிந்தியாவிலிருந்து . இச்சங்கத்தின் வருகையை விரும்பாதவர்கள் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

1951 காலப்பகுதியில் இலங்கை – இந்திய நாடுகளுக்கிடையிலே வியாபார ஒப்பந்தமொன்றினைமேற்கொள்ளும் பொருட்டு ஒரு தூதுக்குழு இலங்கை வந்தது. எனினும் இவ்வியாபாரம் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளையும் அக்குழு மேற்கொள்ளவில்லை. இலங்கை அரசும் போதிய அக்கறையை இவ்விடயத்தில் காட்டவில்லை.

1953இல் புகையிலை வியாபாரம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள் வதற்கு ஒரு குழு இலங்கையிலிருந்து இந்தியா

சென்றது. இக்குழுவில் சி.இராசரத்தினம், சு.நடேசன், வி.குமாரசாமி போன்ற பலர் அடங்கியிருந்தனர். இப்பேச்சுவார்த்தைகளின் முடிவில் 2500 கண்டிப் புகையிலையை நான்கு வருடங் களுக்குப் பெற்றுக்கொள்வதாகவும் இறக்கு மதித் தீர்வையில் சலுகை காட்டுவதா கவும் இந்திய அரசாங்கம் அறிவித்தது. இதில் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கு மட்டும் 1660 கண்டிப் புகையிலையை அனுப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இந்திய அரசாங்கம் தான் செய்துகொண்ட உடன்பாட்டின்படி சரியான முறையில் நடந்து கொள்ளவில்லை. இதன் காரணமாக 130 கண்டிப்புகையிலை 1954 மே 16வரை இலங்கையில் தேங்கியிருந்தது.

இவற்றினைக் கருத்தில் கொண்டு சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஒரு பத்திரிகையின் செய்தியில் பின்வரும் ஆலோசனை யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு கூறப்பட்டிருந்தது.

''இலங்கை அரசினர் இவ்விடயத்தை நன்கு ஆராய்ந்து ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டும். விநியோகம் செய்ய எப்போதும் மலையாளத்தை நம்பியிருப்ப தனால்தான் இந்தப் பரிதாப நிலை ஏற்படு கின்றது. யாழ்ப்பாணப் புகையிலையை விற்பனை செய்ய வேறுநாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது காலத்திற்கேற்ற வேறுவிதப் புகையிலையை உண்டாக்கும் முறையை யாழ்ப்பாணக் கமக்காரர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.[15]

**வீழ்ச்சி நிலை**

1956இல் மலையாளப் புகையிலை வியாபாரத்தில் வீழ்ச்சித் தன்மையொன்று தெளிவாகத் தெரிந்தது. அக்காலப் பகுதியில் வெளிவந்து கொண்டிருந்த ஈழகேசரி வியாபாரத்திற்கு முடிவு காலம் நெருங்கி விட்டதாக பின்வருமாறு கூறுகின்றது.

''யாழ்ப்பாணத்து கமக்காரர்களின் உயிர்நாடியாக இருந்து நூறு வருடங்கள் அவர்களின் சீவனோபாயத்திற்கு உதவி புரிந்த மலையாளப் புகையிலை வியாபாரம் 1957ஐ அடுத்த வருட ஆரம்பத்துடன் முடிவடை கின்றது என்ற செய்தி துயரடைய வைக்கின்றது. இதனால் 25000 மக்கள் பாதிப்படைய வாய்ப்பதிகம்''[16]

இவ்வியாபாரம் 1960ஆம் ஆண்டை அடுத்த காலங்களில் முற்றாக வீழ்ச்சியடைந் தது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் என்றால் இலங்கையில் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களுக்கு இரண்டு பொருட்களே கண்முன் தெரியும். அவை பனையும் அதன் பொருட்களும். மற்றையது சுருட்டும் புகையிலையும்''[17] அவ்வளவு தூரத்திற்கு யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தின் உயிர்நாடியாக இவை காணப்பட்டன. 1612இல் நமது நாட்டில் போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலை அல்வாய், கொக்குவில், கோண்டாவில், இணுவில், வேலணை, அனலைதீவு போன்ற இடங்களில் பெருவாரி யாகப் பயிர் செய்யப்பட்டது. இவ்வாறு பல ஆண்டுகளாக யாழ்குடாநாட்டு மக்களின் வாழ்வில் செல்வாக்குச் செலுத்திய இவ்வியாபாரத்தின் வீழ்ச்சிக்குப் பல காரணிகள் துணைநின்றன. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து இவற்றின் பிரதியீட்டுப் பொருட்களின் வருகை, இந்தியாவில் புகையிலை உற்பத்தியின் அதிகரிப்பு, இப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர் கள் வேறு தொழில்களை நாடியமை, மற்றும் அரசியல் காரணிகள் போன்ற பல காரணங்

களால் மலையாளப் புகையிலை வியாபாரம் வீழ்ச்சி கண்டது.

முடிவுரை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஐரோப்பியர் களால் அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலைச் செய்கை அவர்களின் காலத்திலேயே குடாநாட்டு மக்களால் முன்னெடுக்கப்பட்டு உலகறியச் செய்யப்பட்டது. அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஒவ்வொரு பகுதியி லும் புகையிலை செய்கை பண்ணப்பட்டது. மதில்கள் புகையிலையால் நிறைந்தன. சுருட்டுக் கொட்டில்கள் மூலைக்கு மூலை இருந்தன. மலையாளத்திற்கு அனுப்பப்பட்ட புகையிலை தரமானதாகவும் அவர்களால் அக்காலத்தில் விரும்பப்பட்டதாகவும் காணப்பட்டது. இந்தியாவின் பிறபகுதியிலிருந்து புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டாலும் குடாநாட்டுப் புகையிலைக்கு தனி மதிப்பு இந்தியாவில் இருந்தது. அக்காலத்தில் ஐக்கிய வியாபாரச் சங்கம் அமைக்கப்பட்டு ஒழுங்கான முறையில் இவ்வியாபாரம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. தென்னி லங்கை அரசாங்கம் இதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் கண்டு பொறாமை அடைந்தது. மேலும் அரசின் ஆதரவு இவ் வியாபாரம் தொடர்பாகக் குடாநாட்டு மக்களுக்கு இருக்கவில்லையென்றே கூறவேண்டும். இவ்வாறு பலகாலம் செல்வாக்குப் பெற்று விளங்கிய இவ்வியாபாரம் இருபதாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து தனது செல்வாக்கினை இழந்து சென்றதனை அவதானிக்க முடிகிறது.

## அடிக்குறிப்புக்கள்

1. பத்மநாதன், சி; (1992)– "ஆட்சிமுறை" யாழ்ப்பாண இராச்சியம், சிற்றம்பலம், சி.க.(பதிப்பாசிரியர்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம், ப – 123
2. மேற்படி, ப – 125
3. இராசநாயகம், செ; (1999) யாழ்ப்பாணச் சரித்திரம் ஏசியன் – எடுக்கேசனல் சர்வீசஸ், புதுடில்லி – சென்னை, ப – 150
4. மேற்படி, ப – 215
5. Abeyasinghe Tikiri; (1886), Jaffna under the Portugues, Lake House Innestments (Ltd), Colombo, p.37
6. Bancil.P; (1971) Ceylon Agriculture a perpective. Dhanatraiandsons, Delhi, p.242
7. ஈழகேசரி, 1933 ஜனவரி 01, ப – 04
8. இந்துசாதனம், 1939 ஜீலை 05, ப – 02
9. ஈழசேகரி, 1951 செப்ரம்பர் 02, ப – 04
10. ஈழகேசரி, 1933 ஜனவரி 01 ப – 08

11. அருளம்பலம், எஸ்; (1935) ஆகஸ்ட் 22, "சுருட்டு வியாபரம்" இந்து சாதனம் ப – 01, ப – 06

12. ஈழகேசரி, 1933 யூலை 02, ப – 08

13. ஈழகேசரி, 1933 யூலை 16, 02 – 08

14. ஈழகேசரி, 1934 யூலை 02, ப – 08

15. ஈழகேசரி, 1954 மே 16, ப – 06

16. ஈழகேசரி, 1956 டிசம்பர் 23, ப – 07

16. குணராசா, க; சுருட்டுக் கைத்தொழில், யாழ்ப்பாணம், ப – 07